b) தமிழ்நாட்டை இருப்பிடமாகக் கொண்ட மாணவ /மாணவிகள் சாதிச்சான்றிதழை (நிரந்தரஅட்டை / மின்னணுசான்றிதழ் / டிஜிட்டல் கையொப்பமிடப்பட்ட மின்னணு சான்றிதழ்) இணையதள வாயிலாக விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கடைசி தேதி அல்லது அதற்கு முன் வழங்கப்பட்ட தேதியில் குறிப்பிட்ட அதிகாரிகளிடமிருந்து மட்டுமே பெற்றிருக்க வேண்டும். இணையதள வாயிலாக விண்ணப்பம் சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்பட்ட கடைசிதேதிக்குப் பிறகுபெறப்பட்ட சாதிச்சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| வகுப்புகள் | கையொப்பமிடும் அதிகாரி |
|---|---|
| ஆதிதிராவிடர் **(SC)** | ஆதி பழங்குடி வருவாய் கோட்டஅலுவலர் அவர்களின் சொந்தஊரின் துணைஆட்சியர் (சென்னைதவிர) அல்லது நேர்முக உதவியாளர் (பொது) சென்னை கலெக்டர். 01.11.1989 வரைதாசில்தார்கள் வழங்கிய சாதிச்சான்றிதழ் செல்லும். |
| ஆதிதிராவிடர் - அருந்ததியர் **(SCA)** | மாணவ/மாணவியரின் பூர்வீக இருப்பிடத்தின் தாசில்தார். |
| பிற்படுத்தப்பட்டோர் **(BC)** / பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) **BC(M)** /பிற்படுத்தப்பட்டோர் (வன்னியர்) /மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் **(MBC)** | துலைமையக துணை தாசில்தார் /மண்டல துணை தாசில்தார் / துணை தாசில்தார் (சான்றிதழ்கள்) |

c) பொதுகலந்தாய்விற்கு பிறமாநிலங்களிலிருந்து பெறப்பட்ட சாதிச்சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

d) மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டசாதிகளுக்கு (**community**) மாணவ மாணவிகள் 28.10.2009 அன்று அல்லது அதற்குப் பிறகுபெறப்பட்ட சாதிச்சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படும். அந்தந்த மாவட்டத்தை தவிர மற்றவர்களிடமிருந்து பெறப்பட்டசாதிச்சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

e) மாணவ/மாணவியரின் அசல் சாதிச்சான்றிதழ் சரிபார்ப்பின்போது **(TFC)** நிரந்தர அட்டைசான்றிதழ் / மின்னணுசான்றிதழ் / டிஜிட்டல் கையொப்பமிடப்பட்ட மின்னணு சான்றிதழ் இல்லாதபோது மாணவ மாணவியரின்

விண்ணப்பம் பொதுப்பிரிவு கலந்தாய்வில் சேர்த்துகொள்ளப்படும். பொதுப்பிரிவு கலந்தாய்வினருக்குரிய அனைத்துவிதிகள் மற்றும் நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும். மாணவமாணவியர் இந்த நிபந்தனையை ஏற்று கொள்ளாத போது அவர்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இது தொடர்பாக எந்தவொரு தகவலும் தெரிவிக்கப்படமாட்டாது.

தமிழகத்தில் மாநில அரசு பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு **"முன்னுரிமைஅடிப்படையில்" 7.5%** இடங்களை தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் மற்றும் தனியார் இணைப்பு கல்லூரிகளில் அனைத்து இளமறிவியல் / இளம் தொழில்நுட்பம் பட்டப்படிப்புகளை பயில்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். மாணவ /மாணவியர் தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை படித்திருக்க வேண்டும். "முன்னுரிமை அடிப்படையில்" சேர்க்கப்படும் மாணவ /மாணவியர் தாங்கள் படித்த பள்ளிகளிலிருந்து **ஆளறிசான்று (Bonafide Certificate)** படிவத்தை பூர்த்தி செய்து தலைமை ஆசிரியர் கையொப்பம் பெற்று முதன்மைகல்விஅலுவலர் அவர்களிடம் மேலொப்பம் பெறவேண்டும்.

## 2.2.2.சிறப்பு இட ஒதுக்கீடுகள்

தமிழக அரசின் அரசாணை எண்.167, தேதி 25.04.2008 பரிந்துரையின் படி குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இடங்களுக்கு தமிழக சிறப்பு இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. இவ்விடங்களில் சேர சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்களை, இதர சான்றிதழ்கள் சரிபார்க்கும் சமயத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக சிறப்பு கட்டணமாக ரூ.100/- விண்ணப்பக்கட்டணத்துடன் வசூலிக்கப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு சிறப்பு இட ஒதுக்கீடுகளில் ஒரு மாணவர் ஒன்றுக்கும் மேற்பட்ட பிரிவுகளின் கீழ் தகுதி பெற்றவராக இருந்தாலும், சிறப்பு இட ஒதுக்கீட்டில் ஒரே ஒரு இட ஒதுக்கீட்டு சலுகையை மட்டுமே பெறமுடியும். **எந்தவொரு சூழ்நிலையிலும் சிறப்பு இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு கல்லூரிகளுக்கிடையேயான இடமாற்றத்திற்கு அனுமதியில்லை.**

சிறப்பு இடஒதுக்கீட்டிற்கான தேவையான ஆவணங்களுடன் அவற்றுக்கான இணைப்புப் படிவங்கள் மற்றும் இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது பதிவிறக்கம் செய்த மாணவர் கையொப்பமிட்ட விண்ணப்ப படிவம் (Signed Application Form) இணையவழியில் பதிவேற்றவும். கலந்தாய்வின்போது தேவையான ஆவணங்களை குறிப்பிட்ட தேதிக்குள் பதிவேற்றம் செய்ய தவறும் பட்சத்தில், அதற்குரிய சிறப்பு இடஒதுக்கீட்டினை பெற இயலாது. சிறப்பு இடஒதுக்கீட்டிற்கான சான்றிதழ் சரிபார்ப்பு தேதிகள் பல்கலைக்கழகத்தால் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் முகவரி மூலம் தெரிவிக்கப்படும்.

### 2.2.2.1. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு இடஒதுக்கீடு

ஐந்து சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர்களுக்கு ஜூலை 1 ஆம் தேதி 2021 அன்று அதிக பட்ச வயது வரம்பு 26 க்குள் இருக்கவேண்டும்.

செவித்திறன் குறைபாடுள்ள / எலும்பு ரீதியான குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள் / பார்வை குறைபாடுள்ள மாணவ / மாணவியர்களுக்கு அதற்குரிய சான்றிதழை, மாவட்ட மருத்துவ வாரியத்திடமிருந்து மட்டுமே பெற்று சமர்ப்பிக்க வேண்டும். தனி மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ஏற்று கொள்ளப்படமாட்டாது. மேலும் சேர்க்கையின் போது பல்கலைக்கழக மருத்துவக்குழு, மாணவரின் உடற்தகுதியை ஆராய்ந்து, தகுதியிருந்தால் மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்படும். இடஒதுக்கீடு கிடைக்கப்பெறும் பட்சத்தில், மாணவர் உறுதிமொழிப் படிவம் பின் இணைப்பு **IV** (இணையவழி விண்ணப்பத்தின் பொது கிடைக்கப்பெறும்) மற்றும் மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

### 2.2.2.2. முன்னாள் இராணுவ வீரர்களின் வாரிசுகள்

உறுப்பு கல்லூரிகளில் ஒவ்வொரு பட்டப்படிப்புக்கும் தலா ஒரு இடம் முன்னாள் இராணுவ வீரர்களின் மகன் / மகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சுய நிதி பட்டப் படிப்புகளுக்கு இந்த ஒதுக்கீடு கிடைக்காது.

தலா ஒரு இடம் வீதம் முன்னாள் இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களுக்கு தகுதியைக்கோரும் மாணவ / மாணவியர்கள், பூர்த்தி செய்யப்பட்ட பின் இணைப்பு **III** மற்றும் பெற்றோரின் ராணுவ பணி அனுபவச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் இவ்விட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர்கள; **www.esmwel.tn.gov.in** என்ற இணையதளத்திலுள்ள விண்ணபத்தை பதிவிறக்கம் செய்து உரிய அதிகாரியிடமிருந்து கையொப்பம் பெற்ற வாரிசு சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

### 2.2.2.3. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஓதுக்கீடு

உறுப்பு கல்லூரிகளில் ஒவ்வொரு பட்டப்படிப்புக்கும் தலா ஒரு இடம் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சுய நிதி பட்டப்படிப்புகளுக்கு இந்த ஒதுக்கீடு கிடைக்காது.

தமிழக அரசின் வேளாண்மைத் துறை, துணைச் செயலாளரின் (அரசாணை எண் 20658/AU/2001-1 dt.12.6.2001) கீழ் விளையாட்டு வீரர்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களுக்கு தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் அதற்குரிய நகல்கள் ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த ஒதுக்கீட்டின் நோக்கம், மாணவர்களின் விளையாட்டுத்திறனை அங்கீகரிப்பது ஆகும். இந்த இடஒதுக்கீடு, மாணவர்கள் சர்வதேச/ தேசிய / மாநில அளவில் பெறப்பட்ட விருது / பதக்கம், சான்றிதழ்கள் மற்றும் அதற்கான மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே பரிசீலிக்கப்படும். விளையாட்டு வீரர்களின் சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் தேர்வாகும் மாணவர்கள் பின் இணைப்பு **VIa** மற்றும் **VIb** சான்றிதழை பூர்த்தி

செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்விடங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களில் தகுதிவாய்ந்த மாணவர்கள் பின் இணைப்பு **X** இல் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி பெறப்பட்ட விளையாட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஒரு மாணவர் அதிகபட்சமாக கடந்த நான்கு ஆண்டுகளில் (2021-2020 2020-2019, 2019-2018, 2018-2017) விளையாட்டுப் பிரிவுகளில் பெற்ற **நான்கு சாதனைகளை** மட்டுமே பட்டியலிட வேண்டும். மேலே குறிப்பிட்ட நான்கு வருடங்களில், ஒவ்வொரு வருடத்திற்கும் மாணவர்கள் பெற்ற மிக அதிகபட்ச ஒரு சாதனை மட்டுமே மதிப்பெண் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### 2.2.3. இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்திற்கான இடஒதுக்கீடு (ICAR)

இளமறிவியல் (மேதமை) வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல் மற்றும் பட்டு வளர்ப்பு மற்றும் இளம் தொழில்நுட்பம் (வேளாண் பொறியியல்) ஆகிய பாடப்பிரிவுகளில் உள்ள மொத்த இடங்களில் 15 சதவீத இடங்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தால் நடத்தப்படும் தேசிய அளவிலான நுழைவுத்தேர்வின் மதிப்பெண் மற்றும் கலந்தாய்வின் அடிப்படையில் நிரப்பப்படும்.

### 2.2.4. வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI) மற்றும் வேளாண் தொழில் நிறுவனங்களுக்கான (INDUSTRY SPONSORSHIP) சிறப்பு இடஒதுக்கீடுகள்

வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கான இடஒதுக்கீடு மற்றும் வேளாண் தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு இடஒதுக்கீட்டில், ஒவ்வொரு பாடப்பிரிவுக்கும் (இந்த சிறப்பு இடஒதுக்கீடு பிரிவு 2.1.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி) குறைந்தபட்ச கல்வித்தகுதி மற்றும் அதிகபட்ச வயது வரம்பு 21க்கு மிகாமல் இருக்க வேண்டும். மேற்கூறிய சிறப்பு ஒதுக்கீடுகளுக்கு தனி சான்றிதழ் சரிபார்க்கும் குழுக்கள் மூலம் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதால், விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர், தகுதியான சான்றிதழ்கள் மற்றும் துணை ஆவணங்களுடன், இணையவழியில் விண்ணப்பிக்கும் போது பதிவிறக்கம் செய்த கையொப்பமிட்ட விண்ணப்ப படிவம் (Signed Application Form) பதிவேற்றம் செய்யவும். இவ்விடங்களுக்கு சான்றிதழ் சரி பார்க்க திட்டமிடப்பட்டுள்ள தேதிகள் பல்கலைக்கழகத்தால் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் முகவரி மூலம் தெரிவிக்கப்படும். பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்திலும் அறிவிக்கப்படும்.

### 2.2.4.1. வேளாண் தொழில் நிறுவனங்களுக்கான இடஒதுக்கீடு

வேளாண் உற்பத்தியில் தொடர்புடைய எந்தவொரு பொது / தனியார் வரையறுக்கப்பட்ட தொழில் நிறுவனமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் வணிக கூட்டமைப்பில் (ABC) உறுப்பினராகலாம். இதில் உறுப்பினராக உள்ள நிறுவனம், இந்த ஒதுக்கீட்டில் இளங்கலையில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் உள்ள ஒரு இடத்திற்கு ஒரு மாணவ / மாணவியரை பரிந்துரைக்க முடியும். மேலும் இவ்வுறுப்பினர்கள் நான்கு ஆண்டுக்கு ஒருமுறை இந்திய குடியுரிமையுள்ள ஒரு மாணவ / மாணவிக்கு இளமறிவியல் பட்டப் படிப்பிற்கு பரிந்துரைக்கலாம்.

மாணவ / மாணவியருக்கு பரிந்துரை செய்ய விரும்பும் வேளாண் தொழில் நிறுவனங்கள் தமிழக அரசின் தொழில் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும்.

1. தமிழ்நாடு வேளாணமைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் வணிக கூட்டமைப்பில்

(ABC) உறுப்பினராக விருப்பம் தெரிவித்து இயக்குநர் (வேளாண் வணிக கூட்டமைப்பு) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை) ஆகியோருக்கு வழங்கிய அசல் கடிதம்

2. விற்பனை வரி பதிவு சான்றிதழ் நகல் **(TNGST / CST /GST )**
3. நிறுவனத்தின் நிரந்தர கணக்கு எண் **(Pancard)** அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட **(Self Attested)** நகல்
4. நிர்வாக இயக்குனரின் நிரந்தர கணக்கு எண் **(Pancard)** அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட **(Self Attested)** நகல்
5. நிறுவனத்தின் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு வரவு செலவு கணக்கு தணிக்கை செய்யப்படடு தணிக்கையாளரால் சான்றளிக்கப்பட்ட அறிக்கையின் நகல் (நிதி ஆண்டு 2020-21 2019-20 2018-19)
6. நிறுவனத்தின் தணிக்கையாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்டவர் கையொப்பமிட்டு சான்றளித்த வருமானவரி அறிக்கையின் நகல் (2020-21 2019-20 2018-19). நடப்பு நிதியாண்டிற்கான கணக்குகள் தாக்கல் செய்யப்படாமல் இருந்தால் 2020-21 க்கு முன் கூட்டியே செலுத்தப்பட்ட அல்லது சுய மதிப்பீட்டு வரிக்கான சான்றுகள் இவற்றுடன் வருமானவரி கணக்கிற்கான நிலையை குறிப்பிடும் தணிக்கையாளரின் கடிதம்.
7. நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான ஒருங்கிணைப்புச் சான்றிதழ் நகல் **(Photocopy of Certificate of Incorporation)**
8. நிறுவனம் / சங்கத்தின் கூட்டமைப்பின் பதிவு சான்றிதழ் நகல் **(Photocopy of Article of Association and Memorandum of Association).**
9. நிறுவனத்திலிருந்து மாணவருக்கு அளிக்கும் பரிந்துரைக் கடிதம் **(Sponsorship Letter)**

மேற்கண்ட ஆவணங்களின் அசல் சான்றிதழ்களை சேர்க்கைக்கான கலந்தாய்வின் போது சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இவற்றின் நகல் ஆவணங்களில் தொழில் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபர் சான்றளிக்க வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு குழு மாணவ / மாணவியருக்கு பரிந்துரை செய்த வேளாண் தொழில் நிறுவனங்களின் உண்மைத் தன்மை மற்றும் நிறுவனத்தின் செயல்பாடுகளை நேரடியாகச் சென்று மதிப்பிடும். இக்குழுவின் முழுமையான பயண செலவினங்களை அந்தந்த நிறுவனமே ஏற்க வேண்டும். (இதற்காக ரூபாய்.25,000/-யை **"The Dean (Agriculture), Tamil Nadu Agricultural University, Coimbatore"** என்ற பெயரில் கேட்பு வரைவோலையை (Demand Draft) சமர்ப்பிக்க வேண்டும்.) இந்த தொகையை ஆவணங்கள் சமர்ப்பிக்கும் நாளன்று செலுத்த வேண்டும்

கலந்தாய்வு மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்த பின்னர் மாணவர் பாடப்பிரிவை தேர்தெடுக்கும் சமயத்தில் தொழில் நிறுவனமானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (ரூ.100/- முத்திரை தாளில்) செய்ய வேண்டும். இதற்கு தொழில் நிறுவனம் **"The Dean (Agriculture), Tamil Nadu**

**Agricultural University, Coimbatore"** என்ற பெயரில் ரூ. 12.00 இலட்சத்திற்கான ஒரே கேட்பு வரைவோலையாக **(Demand Draft) நேரில் சமர்ப்பித்து,** புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கையொப்பம் இடவேண்டும்.

### 2.2.4.2. வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான இட ஒதுக்கீடு (NRI)

இளங்கலை பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவிகள் வெளிநாடு வாழ் இந்தியராகவோ அல்லது வெளிநாடுவாழ் இந்தியரின் நெருங்கிய நேரடி உறவினராகவோ இருக்கலாம். இவ்விடஒதுக்கீட்டின் கீழ் சேரும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் ஒரு பருவத்திற்கு 3,300 அமெரிக்க டாலர் ஆகும். மாணவர்களின் நான்கு வருட பட்டப்படிப்பு பூர்த்தியாவதற்க்கு முன் வெளிநாடு வாழ் இந்தியர், இந்தியாவிற்கு வந்து திரும்ப வெளிநாடு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அவர் மாணவருக்கு செலுத்த வேண்டிய மீதமுள்ள பருவத்திற்கான கல்விக் கட்டணத்தை மொத்தமாக ஒரே தவனையில் செலுத்த வேண்டும்.

வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) இடஒதுக்கீட்டின் கீழ் மாணவர் சேர்க்கைக்கு கீழ்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

1. வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) ஒதுக்கீட்டின் கீழ் மாணவரை பரிந்துரைத்து விருப்பம் தெரிவிக்கும் வெளிநாடு வாழ் இந்தியரின் ஒப்புதல் கடிதம்.
2. வெளிநாடுவாழ் இந்தியரின் கடவுசீட்டு **(PASSPORT)** மற்றும் அயல்நாட்டு நுழைவுச்சான்று **(VISA)** ஆகியவற்றின் சுயசான்றளிக்கப்பட்ட நகல்.
3. இந்திய தூதரக அதிகாரியால் வெளிநாடு வாழ் இந்தியர் என்று சான்றளிக்கப்பட்ட அசல் சான்றிதழ்.

   (குறிப்பு: குடியுரிமை அட்டை / நிரந்தர குடியுரிமை அட்டை / வெளிநாடு இருப்பிட அட்டை / OCI / வெளிநாட்டில் வேலை வாய்ப்பு சான்றிதழ் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
4. மாணவர் நெருங்கிய நேரடி உறவினர் என்பதற்கான நேரடியான ஆவணம் இல்லாத பட்சத்தில் சான்றுருதி வழக்குரைஞரிடம் **(Notarized Public)** ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் பெறப்பட்ட சான்று. **(Notarized Affidavit).**

   (சான்றுருதி வழக்குரைஞர் தன் பதிவேட்டில் குறித்து வைத்துள்ள விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.)

### 2.2.5. இந்தியாவில் கல்வி கற்றல் என்ற திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு

பல்கலைக்கழகத்தின் 139 வது கல்வி அலுவல் குழுவின் ஒப்புதலின் படி இந்திய கலாச்சார உறவுகள் தூதரகம் மூலம் அனுமதி பெறும் சிறப்பு ஒதுக்கீடு வெளிநாட்டு மாணவர்களுக்கு சில குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 3. மாணவர்களை பாடப்பிரிவுகளுக்கு தேர்வு செய்யும் முறைகள்

விண்ணப்பித்த மாணவர்களை தேர்வு செய்ய, இணைய வழியில் கலந்தாய்வு நடத்தப்படும். சிறப்பு இட ஒதுக்கீடுகளான மாற்றுத்திறனாளிகள், அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு, சிறந்த விளையாட்டு வீரர்கள், முன்னாள் இராணுவத்தினர்களின் வாரிசுகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், வேளாண் தொழில் நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படும் மாணவர்கள் மற்றும் தொழிற்முறைக் கல்வி பாடப் பிரிவில் பயின்ற மாணவர்களுக்கும் நேரடி கலந்தாய்வு நடத்தப்படும்.

### 3.1. இணையவழி கலந்தாய்வு

- பிரிவு 2.1.1a இல் கொடுக்கப்பட்டுள்ள வழி முறையின் படி இணையவழி கலந்தாய்வின் போது, மாணவர்கள் தாங்கள் பெற்ற தர வரிசை மதிப்பெண் அடிப்படையில் தங்களுக்கான பாடப்பிரிவு மற்றும் கல்லுரியை தேர்வு செய்யலாம்.
- தகவல் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பட்டப்படிப்புகளுக்கும் இணையவழியாக மட்டுமே கலந்தாய்வு நடத்தப்படும்.
- கலந்தாய்விற்கு முன்னர், மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். தொடர்ந்து, கலந்தாய்வில் கலந்து கொள்ள, கலந்தாய்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு (1:5 என்ற விகிதத்தில்) மின்னஞ்சல் மற்றும் அலைபேசி வாயிலாக குறுஞ்செய்தியாக **(SMS)** அழைப்பு அனுப்பப்படும் **இணையவழி கலந்தாய்விற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பட்டப்படிப்பிற்கான இடம் ஒதுக்கப்படும் என்பதற்கான எந்த உத்திரவாதமும் இல்லை.**
- தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் இணையவழி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் போது கலந்தாய்வுக் கட்டணமாக ரூ.3000/- இணையதள வாயிலாக செலுத்தவேண்டும். **(SC / ST / SCA** பிரிவினருக்கு ரூ.1500/-) (**கலந்தாய்வுக் கட்டணத்தை திரும்பப் பெற இயலாது).**
- கட்டணம் செலுத்தாதவர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ள முடியாது. கலந்தாய்வுக் கட்டணத்தை இணையதள வழியில் செலுத்திய மாணவர்கள் மட்டுமே பல்கலைக் கழகத்தால் அறிவிக்கப்படும் இணையவழி கலந்தாய்வில் குறிப்பிட்ட தேதியில் கலந்து கொள்ள முடியும்.
- இணையவழி கலந்தாய்வின் போது மாணவர்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பட்டப்படிப்புகள் மற்றும் கல்லுரிகளை மீண்டும் **ஒரு முறை** மாற்றி அமைத்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்படும். அச்சமயம் அவர்களுக்கான விருப்பப் பட்டப்படிப்பு தேர்வு வரிசையில், எந்த மாற்றமும் செய்யப்படாவிட்டால் மாணவர், தான் முதன் முதலில் விண்ணப்பத்தில் அளித்த விருப்பப் பாடப்பிரிவு தேர்வு வரிசையே இறுதியாக, அடுத்தடுத்த நகர்வு முறைக்கு பரிசீலிக்கப்படும். இதன் பிறகு எக்காரணத்தைக் கொண்டும் பின்வரும் கலந்தாய்வில் கல்லூரி மற்றும் பாடப்பிரிவுகளை மாற்ற இயலாது.
- இணையவழி கலந்தாய்வின் முடிவில், மாணவர்களின் தரவரிசை, சாதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் பட்டப்படிப்பு மற்றும் கல்லூரி ஒதுக்கீடு செய்யப்படும். ஒதுக்கப்பட்ட இடங்களின் விவரங்கள் மாணவர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். தவிர, பல்கலைக்கழக இணையதளத்திலும் வெளியிடப்படும். மேலும், கல்லூரி சேர்க்கைக் கட்டணம், கட்டணம் செலுத்த வேண்டிய தேதி, இட ஒதுக்கீட்டு கடிதம், பதிவிற்கான விபரம் மற்றும் தகுதிச் சான்றிதழ் சரிபார்ப்பதற்குத் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டிய தேதி குறித்த விரிவான வழிமுறைகள், விண்ணப்பிக்கும்போது மாணவர்களால் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கப்படும்.
- இணையதள கலந்தாய்விற்கு பதிவு செய்த மாணவ / மாணவிகள் (கலந்தாய்வுக் கட்டணம் செலுத்தியபின்) எந்த இட ஒதுக்கீடும் கிடைக்கப் பெறவில்லையெனில், அடுத்தடுத்த நகர்வு முறையில் ஏற்படும் காலியிடங்களுக்கு பரிசீலிக்கப்படுவார்கள்.
- இணையவழி கலந்தாய்வின் முடிவில் இடஒதுக்கீடு பெற்ற மாணவ / மாணவிகள் அசல் சான்றிதழ்கள், இணைப்பில் கோரப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்படும் குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
- மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் / ஆவண சரிபார்ப்புக்கு வருவதற்கு முன் சேர்க்கைக் கட்டணமாக ரூ.20,000/- இணையவழியில்

செலுத்த வேண்டும். சேர்க்கைக் கட்டணத்தை வெற்றிகரமாக செலுத்திய பின்னரே, பட்டப்படிப்பு மற்றும் கல்லூரி ஒதுக்கீடு கடிதத்தைப் இணையவழியில் பதிவிறக்கம் செய்ய முடியும். இந்த தொகை, பின்னர் அவர்களின முதல் பருவக்கட்டணத்தில் வரவு வைக்கப்படும். இந்த தொகையை செலுத்துவதால் மட்டுமே இடங்கள் உறுதிப்படுத்தப்படுவதற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது. சான்றிதழ்கள் / ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னரே இடஒதுக்கீடு உறுதி செய்யப்படும். முடிவில் தற்காலிக சேர்க்கை கடிதம் வழங்கப்படும்.

- ஒருமுறை தற்காலிக சேர்க்கைக் கடிதம் வழங்கப்பட்டால் எக்காரணத்தை கொண்டும் சேர்க்கை கட்டணமாக செலுத்திய ரூ.20,000/- திரும்ப தரப்படமாட்டாது.

- சேர்க்கையின் போது கொடுக்கப்படும் ஏதேனும் தகவல் (மதிப்பெண்கள் தகுதி, சாதிப்பிரிவு, பிறந்த தேதி, இருப்பிடச் சான்றிதழ்) போன்றவற்றில் தவறு கண்டறியப்பட்டால், விண்ணப்பம் நிராகரிக்கப்படும். உண்மைத்தன்மையை நிரூபிக்க சான்றிதழ்கள் / ஆவணங்கள் சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் கட்டணம் செலுத்த தவறும் பட்சத்தில் அவர்களுக்கான இடங்கள் ரத்து செய்யப்படும்.

- **சிறப்பு இடஒதுக்கீட்டு இடங்களான மாற்றுத்திறனாளிகள், முன்னாள் இராணுவ வீரர்களின் வாரிசுகள், அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு, சிறந்த விளையாட்டு வீரர்கள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI), வேளாண் தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு இடஒதுக்கீடுகள் (Industrial Sponsorship) மற்றும் தொழில்முறைக் கல்விக்கான இடங்கள் ஆகியவற்றிற்கும் நேரடி கலந்தாய்வு நடத்தப்படும்.**

- தமிழ்நாட்டை இருப்பிடமாகக் கொண்ட மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது, ஏதேனும் ஒரு சிறப்பு இடஒதுக்கீட்டைத் தேர்வு செய்திருந்தால் அவர்கள் பொதுப்பிரிவு கலந்தாய்விற்க்கும் தகுதி உடையவர்களாகிறார்கள். ஆனால், விண்ணபத்தை பூர்த்தி செய்யும் போது, கல்லூரி மற்றும் பட்டப்படிப்பிற்கான விருப்பத்தினை பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே பொதுப்பிரிவு கலந்தாய்வுக்கு தகுதி உடையவர்களாகிறார்கள்.

  சிறப்பு இடஒதுக்கீட்டிற்கான கல்லூரி மற்றும் பட்டப்படிப்புத் தேர்வினை தனியாக பூர்த்தி செய்ய வேண்டும்.

## 3.2. கல்லூரிகளுக்கிடையேயான இடங்கள் நகர்வு முறை (SLIDING SYSTEM)

ஒவ்வொரு கலந்தாய்வின் முடிவில் மாணவர்கள் அவர்கள் விண்ணப்பத்தில் அளித்த விருப்பப் பாடப்பிரிவு, விருப்ப வரிசையின்படி கல்லூரியிலுள்ள காலி இடங்களின் அடிப்படையில் அவர்களுக்கான பாடப்பிரிவு அவர்களின் தரவரிசையின் அடிப்படையில் ஒதுக்கப்படும்.

மாணவர்களுக்கு ஒரு கல்லூரியில் இடம் ஒதுக்கப்பட்ட பிறகு, அவர்கள் தாங்கள் கொடுத்த விருப்பப்பட்டியலில் உள்ள வேறு கல்லூரிகளுக்குச் செல்ல விரும்பினால், நகர்வு முறையை (Sliding System) தேர்ந்தெடுக்கலாம். **நகர்வு முறை என்பது ஒவ்வொரு இணையவழி கலந்தாய்வின் முடிவில், ஒதுக்கப்பட்ட கல்லூரியிலிருந்து மேல்நோக்கி மட்டுமே நகரும். விருப்ப வரிசையின்படி கீழ் நோக்கி நகராது**.

**உதாரணமாக,**

a. ஒரு மாணவருக்கு அவருடைய மதிப்பெண், தரவரிசையின் படி, அவர் விருப்பப்பட்டியலில் 5-வது இடத்தில் உள்ள கல்லூரி ஒதுக்கப்பட்டிருக்குமாயின், நகர்வுமுறையை தேர்ந்தெடுப்பதால் **4,3,2,1** என்ற வரிசையில் கல்லூரிகளில் ஏதாவது ஒன்று ஒதுக்கப்படலாமே தவிர **6,7,8...** என்ற வரிசைப்படி நகராது.

b. ஒரு மாணவர் அவர் விண்ணப்பிக்கும் போது

5-வது இடத்தில் இளமறிவியல் (மேதமை) வேளாண்மை, படிப்பினை அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி.

4-வது இடத்தில் இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பெரியகுளம்.

3-வது இடத்தில் இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை, வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூர்.

2-வது இடத்தில் இளம் தொழில்நுட்பம் (உணவுத் தொழில்நுட்பம்), வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூர்.

1-வது இடத்தில் இளமறிவியல் (மேதமை) வேளாண்மை, வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கோயம்புத்தூர்.

என தரவரிசை படுத்தியிருப்பின், இணையவழி கலந்தாய்வில் மாணவருக்கு அவருடைய மதிப்பெண், விருப்பம் மற்றும் வகுப்புவாரியான அடிப்படையிலேயே பாடப்பிரிவு மற்றும் கல்லூரி ஒதுக்கீடு செய்யப்படும். மாணவருக்கு 5-வது இடத்தில் உள்ள கல்லூரி கிடைக்கப்பெற்று, அவர் நகர்வுமுறையை தேர்வு செய்திருந்தால், மாணவரின் தரவரிசை படுத்தியிருந்த பாடப்பிரிவுகளின்படியே நகர்வுமுறையில் **(Sliding System)** அவருடைய விருப்பத்தெரிவிற்கு ஏற்ப ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பாடப்பிரிவு மற்றும் கல்லூரியில் மாற்றம் செய்யப்படும். இதனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடப்பிரிவிலும் மாற்றம் வரும்.

c. நகர்வுமுறைக்கு விருப்பம் **(Sliding System)** தெரிவித்த மாணவருக்கு தேர்வுவரிசையின்படி, இறுதியாக ஒதுக்கீடு செய்யப்படும் கல்லூரியே உறுதியானது. மேலும் நகர்வு முறையில் எந்த மாற்றமும் செய்ய இயலாது. உதாரணத்தின் படி நகர்வுமுறையில் 5-வது இடத்திலுருந்து 3-வது இடத்திற்க்கு கல்லூரியில் இடஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு மீண்டும் 5வது இடத்தைக் கோர முடியாது.

d. நகர்வு முறையில், விருப்பம் தெரிவித்த பின்னர் இறுதி நிலை நகர்வு முறை வரை மாணவர்கள் உட்படுத்தப்படுவர். **நகர்வு முறையின் இடையில், நிறுத்தம் செய்ய இயலாது.**

e. மிக முக்கியமாக, இளமறிவியல் (மேதமை) வேளாண்மை கிடைக்கப்பெற்று நகர்வு முறைக்கு விண்ணப்பித்த மாணவருக்கு, நகர்வு முறையில் அதே பாடப்பிரிவு மட்டுமே கிடைக்கும் என்று கூறமுடியாது. தரவரிசையின்படி அவர்கள் விருப்பம் தெரிவித்த எந்தவொரு பாடப்பிரிவும் கிடைக்கப் பெறலாம்.

3.2 சிறப்பு ஒதுக்கீடுகள் (மாற்றுத் திறனாளிகள், பிரபல விளையாட்டு வீரர், முன்னாள் ராணுவ வீரர்களின் மகன்/மகள், மாநில அரசு பள்ளி ஒதுக்கீடு), வெளிநாட்டு வாழ் இந்தியர், தொழில்துறை நிறுவனம் அளிக்கும் பரிந்துரை மற்றும் தொழில் முறை கல்வி மாணவர்களுக்கும் நேரடி கலந்தாய்வு நடத்தப்படும். மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள், மாநில அரசு பள்ளி ஒதுக்கீடு மற்றும் தொழிற்கல்வி ஒதுக்கீடு ஆகியவற்றுக்கான நேரடி கலந்தாய்வு பொது கலந்தாய்விற்கு முன்னதாக நடத்தப்படும். வெளிநாட்டு வாழ் இந்தியர் மற்றும் நிறுவன ஒதுக்கீட்டுக்கான கலந்தாய்வு ஒன்று அல்லது இரண்டு கட்ட பொது கலந்தாய்வுக்கு பிறகு நடத்தப்படும். ஏதேனும் சிறப்பு முன்பதிவு கலந்தாய்வில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தங்களின் சிறப்பு முன்பதிவு தொடர்பான தேவையான

அசல் ஆவணம் / சான்றிதழை கொண்டு வர வேண்டும். கலந்தாய்வின் போது தேவையான அசல் ஆவணங்கள் விண்ணப்பதாரர் தயார் செய்யவில்லை என்றால், அவர்கள் கலந்தாய்வில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### 3.2.1 நேரடி கலந்தாய்வு முறை

நேரடி கலந்தாய்வின் போது தரவரிசை அடிப்படையில் பட்டதாரிகள் கல்லூரிகளை தேர்வு செய்யலாம். விண்ணப்பதாரர்கள் நுழைவு மற்றும் வெளியேறும் போது வருகை பதிவு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் கலந்தாய்வு நேரத்தில் கிடைக்கும் பட்டப்படிப்பு மற்றும் கல்லூரியை தேர்வு செய்ய வேண்டும். இதுவே இறுதியானது மாற்றப்படாது. கலந்தாய்வின் போது நகர்வுமுறை விருப்பங்கள் எழுத்து மூலமாக பெறப்படும். கலந்தாய்வில் கலந்துகொண்டு எந்த இடத்தையும் தேர்ந்தெடுக்காத விண்ணப்பதாரர்கள் கல்வியாண்டில் எந்த ஒரு கலந்தாய்விலும் கலந்துக் கொள்ள முடியாது. கலந்தாய்வில் பங்கு பெறுபவர்களுக்கு இட ஒதுக்கீடு கிடைக்கும் என்று உறுதி படுத்த முடியாது. மேலும், கலந்தாய்வில் கலந்து கொள்பவர்களுக்கு பயணப்படி மற்றும் அகவிலைப்படி (TA and DA) வழங்கப்படாது.

**நேரடி கலந்தாய்வில் ˙விண்ணப்பதாரர்களுக்கான வாய்ப்புகள்**

| விருப்பம் | உட்பிரிவு | கருத்து |
|---|---|---|
| தேர்வு | ஒரு விண்ணப்பதாரர் தங்களுக்கு விருப்பமான ஒரு உறுப்புக்கல்லூரியில் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கலாம் | அவர் நகர்வுமுறையை தேர்வு செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம் |
| தேர்வு செய்யப்படவில்லை | கலந்தாய்வில் விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு இடத்தை தேர்ந்தெடுப்பதற்கு எந்தவொரு விருப்பம் இல்லாமலும் இருக்கலாம் | மேலும் தொடர கலந்தாய்விற்கு வாய்ப்பு இல்லை |
| வாய்ப்பு கிடைக்கவில்லை | கலந்தாய்வில் விண்ணப்பதாரர் தேர்வு செய்ய எந்த ஒரு பாடப் பிரிவு அல்லது கல்லூரியும் இல்லாத போது | காலியிடங்கள் ஏற்பட்டால், அடுத்தடுத்த ஆலோசனைக்கு விண்ணப்பதாரர் அழைக்கப்படுவார். |

குறிப்பு: கலந்தாய்வில் காத்திருப்பு பட்டியல் இல்லை .

குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் கலந்தாய்வில் கலந்து கொள்ளத் தவறிய விண்ணப்பதாரர்கள் சேர்க்கைக்கான உரிமையை இழக்க நேரிடும். இருப்பினும், எதிர்பாராத மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களால், எந்தவொரு விண்ணப்பதாரரும் குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் கலந்தாய்வில் கலந்து கொள்ள முடியாவிட்டால், விண்ணப்பதாரர் அவர்களின் பெற்றோர் / பாதுகாவலரை அவர்கள் சார்பாக அங்கீகரிக்கலாம். பெற்றோரின், பாதுகாவலரின் முடிவுவே இறுதியானது. அத்தகைய அங்கீகார கடிதத்தில் விண்ணப்பதாரர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நபரின் (விண்ணப்பதாரரின் பெற்றோர் / பாதுகாவலர்) புகைப்படங்கள் மற்றும் விண்ணப்பதாரர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நபர் கையொப்பமிட வேண்டும். விண்ணப்பதாரர் சார்பாக கலந்தாய்வில் கலந்து கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட நபர், கலந்தாய்வுக் கடிதம் மற்றும்

புகைப்பட அடையாள சான்றை எடுத்துச் செல்ல வேண்டும். அங்கீகார கடிதத்திற்கான வடிவம் பின் இணைப்பு XII இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.3 உடனடி சேர்க்கை

மாண்புமிகு நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் கமிட்டியின் (G.O.Ms.No.3 வேளாண்மை (AU) துறை தேதி 07.01.2020) அறிவுறுத்தல்களின்படி, கல்லூரிகள் திறந்த பிறகு இணைப்புக் கல்லூரிகளின் காலியிடங்களுக்கு உடனடி சேர்க்கை நடத்தப்படும். உடனடி சேர்க்கையானது நேரடி கலந்தாய்வு மூலம் நடத்தப்படும். இணைப்புக் கல்லூரிகளுக்கு மட்டுமே உடனடி சேர்க்கை பொருந்தும். உறுப்புக் கல்லூரிகளில் உள்ள காலியிடம் காலியாக வைக்கப்படும். மேலும், நகர்வுமுறை பின்பற்றப்படாது. உடனடி சேர்க்கை கலந்தாய்வுக் கட்டணம் இடஒதுக்கீடு பெறும் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டுமே வசூலிக்கப்படும். சேர்க்கை முடிவடைவதற்கு பத்து நாட்களுக்கு முன்பு உடனடி சேர்க்கைக்கான அறிவிப்பு செய்யப்படும். காலியிடங்கள், கல்லூரி வாரியாகவும் சாதி வாரியாகவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணையதள பதிப்பகத்தில் வெளியிடப்படும். இத்தகவல் அனைத்து ஊடக வாயிலாக எல்லோருக்கும் சென்று சேரும் வகையில் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப 1:10 அல்லது அதற்கு மேற்பட்ட விகிதத்தில் அழைக்கப்படுவார்கள். முன்னதாக கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாத அல்லது புதிதாக அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம். பயணப்படி மற்றும் அகவிலைப்படி கலந்தாய்வில் கலந்து கொள்பவர்களுக்கு வழங்கப்படாது. உடனடி சேர்க்கை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 5 வது நாளில் நடத்தப்படும். வருகை குறிக்கப்பட்டு, கலந்து கொண்ட விண்ணப்பதாரர்கள் தரவரிசை அடிப்படையில். கல்லூரி மற்றும் பாடப்பிரிவை தேர்ந்தெடுக்க அழைக்கப் படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து மற்றும் நுழைவுக் கட்டணம் ரூ.20000 செலுத்தி உடனடியாக கல்லூரியில் சேர வேண்டும். கட்டணம் செலுத்துவதற்கு தேவையான வசதி பல்கலைக்கழக வளாகத்திலேயே செய்து தரப்படும். உடனடி சேர்க்கைக்கான அழைப்பானது இட ஒதுக்கீட்டிற்கான உத்தரவாதம் இல்லை. மேலும், கல்வி ஆண்டுக்கான "சேர்க்கை நிறைவு" அறிவிப்புக்குப் பிறகு எந்த விண்ணப்பதாரரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

நிர்வாக ஒதுக்கீட்டு இடத்திலிருந்து கலந்தாய்வு ஒதுக்கீட்டிற்கு மாணவர்கள் செல்லும் பொழுது நிர்வாக ஒதுக்கீடு காலியாக இருக்கும்.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கை முடிவடைந்து ஐந்து நாட்கள் வரை காலியிடங்களை நிரப்ப இணைப்பு கல்லூரிகள் அனுமதிக்க படுவார்கள்.

## 4. கல்வி முறை

பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாகவும், தேர்வுகள் பருவத் தேர்வு (Semester) முறையாகவும் பின்பற்றப்படுகிறது. அனைத்து இளங்கலை பாடத்திட்டங்களும் எட்டு பருவங்களை (4 **ஆண்டுகள்**) கொண்டதாகும். மாணவர்கள் தாங்கள் சேர்ந்த பாடப்பிரிவுகளில் இளங்கலை பட்டம் பெற, அந்தந்த பருவங்களில் பரிந்துரைக்கப்பட்ட பாடங்களை பதிவு செய்து, பயின்று தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். மாணவர், ஒட்டுமொத்த தரப்புள்ளி மதிப்பெண் 10ற்கு சராசரியாக 6.50 தரப்புள்ளிகள் பெற்றிருப்பது அவசியம். மேலும் பல்கலைகழகத்தின் இணையவழி கற்றலுக்கான பாடத்திட்டத்தில் மடிக்கணினி, நான்கு வருடங்களுக்கும் பயன்படுத்துவது அவசியம்.

## 5. பகடிவதை (RAGGING)

பல்கலைக்கழகத்தில் எந்த ஒரு இடத்திலும், எந்த சூழ்நிலையிலும் மற்றும் எந்த நேரத்திலும் கேலிவதை செய்வது மிகப்பெரிய குற்றமாகும். மேலும் குற்றம் நிரூபிக்கப்படின், பகடிவதை செய்த மாணவர் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவர். (தமிழக

அரசு 1997 ஆண்டு 29.1.1997 தேதியிட்டு வெளியிட்ட அரசாணை மசோதா எண் 8 யின் படி நடவடிக்கை எடுக்கப்படும்).

## 6. கட்டணம் மற்றும் வைப்புத்தொகை

கலந்தாய்வின் மூலம் இடஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு மாணவரும் தேர்ந்தெடுத்த பாடப்பிரிவு மற்றும் கல்லூரிகளுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட கல்விக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

## 6.1. பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளுக்கான கட்டண விபரம்

கலந்தாய்வில் கல்லூரி இடஒதுக்கீட்டின் போது மாணவர்களிடம் பெறப்படும் சேர்க்கைக் கட்டணம் (ரூ.20,000/-) முதல் பருவ பதிவுக் கட்டணமாக வரவு வைக்கப்படும். மீதமுள்ள முதல் பருவ பதிவுக் கட்டணத்தை மாணவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கல்லூரியில் சேரும் போது செலுத்திக்கொள்ளலாம்.

### A1. அறிவியல் பாடத்திட்டங்கள்

ஏழு இளங்கலை பாடத்திட்டங்களான இளமறிவியல் (மேதமை) வேளாண்மை, இளமறிவியல் (மேதமை) வேளாண்மை (தமிழ்), இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை, இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை (தமிழ்), இளமறிவியல் (மேதமை) வனவியல், இளமறிவியல் (மேதமை) உணவு, ஊட்டச்சத்து மற்றும் உணவு முறையியல், மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூரில் உள்ள இளம் தொழில்நுட்பம் (வேளாண் பொறியியல்) ஆகியவை வேளாண் அறிவியல் பாடத்திட்டங்களாக கருதப்பட்டு, அதற்குரிய பருவக் கட்டணம் பெறப்படும்.

### A2. தொழில்நுட்ப பாடத்திட்டங்கள்

உணவுத் தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல், இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கோயமுத்தூரில் பயிற்றுவிக்கப்படும் வேளாண் பொறியியல் ஆகியவை வேளாண் தொழில்நுட்ப பாடத்திட்டங்களாக கருதப்பட்டு அதற்குரிய கட்டணம் பெறப்படும்.

### பல்கலைக்கழகத்தின் உறுப்புக்கல்லூரிகளுக்கான கட்டண விபரம்

| வ. எண் | விபரம் | பாடப்பிரிவுகள் | |
|---|---|---|---|
| | | அறிவியல் பாடத் திட்டங்கள் | தொழில்நுட்ப பாடத் திட்டங்கள் |
| | பருவக் கட்டணம் (ரூபாயில்) | | |
| 1. | கல்விக் கட்டணம் * | 4500 | 4500 |
| | சுய நிதிக் கட்டணம் | | |
| 2. | கல்விக்கான உள்கட்டமைப்புக் கட்டணம் ** | 1650 | 1650 |
| 3. | சிறப்புக் கட்டணம் @ | 1550 | 1550 |
| 4. | நூலகக் கட்டணம் | 1100 | 1100 |

| | | | |
|---|---|---|---|
| 5. | தேர்வுக் கட்டணம் | 5000 | 5000 |
| 6. | விளையாட்டுக் கட்டணம் | 850 | 850 |
| 7. | கணினி ஆய்வுக்கூட கட்டணம் | 2000 | 2000 |
| 8. | மின் கட்டணம் | 1500 | 1500 |
| 9. | வேலைவாய்ப்பு மையக் கட்டணம் | 250 | 250 |
| 10. | கல்வி நாற்காட்டிக் கட்டணம் (ஒவ்வொரு ஆண்டும் முதல் பருவத்தில் மட்டும்) | 100 | 100 |
| 11. | கல்விச் சுற்றுலா மற்றும் வெளிப்புறக் கல்விக் கட்டணம் (ஒவ்வொரு ஆண்டும் முதல் பருவத்தில்) | 2000 | 2000 |
| 12. | வளரும் வேளாண்மை - ஆண்டுச் சந்தா கட்டணம் | 100 | 100 |
| | **மொத்தம்** | | |
| | **ஒரே ஒருமுறை செலுத்தும் கட்டணம் (ரூபாயில்)** | | |
| | விளையாட்டுச் சீருடை மற்றும் வண்ண மேல்சட்டை (Blazer) | 3600 | 3600 |
| | வைப்புத் தொகை (Caution money Deposit) | 4800 | 4800 |
| | அடையாள அட்டைக் கட்டணம் | 200 | 200 |
| | விதிமுறைகள் குறித்த புத்தகம் / குறுந்தகடு | 100 | 100 |
| | தேசிய மாணவர் படை வைப்பு நிதி | 10 | 10 |
| | இளம் செஞ்சிலுவை சங்கம் ஆண்டுச் சந்தா கட்டணம் | 15 | 15 |
| | வைப்பு நிதி (TNAU Corpus Fund) | 200 | 200 |
| | மாணவர் சான்றிதழ் சரிபார்ப்புக் கட்டணம் (Higher Secondary/ TNHSC CBSE or ISCE) | 100/ 500 | 100/ 500 |
| | மொத்தம் TNHSC மாணவர்களுக்கு | 9025 | 9025 |
| | மொத்தம் CBSE ISCE மாணவர்களுக்கு | 9425 | 9425 |
| | **மொத்தக் கட்டணம்** | **29625/30025** | **69625/ 70025** |

*** முதல் பட்டதாரி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு விலக்களிக்கப்பட்டது.**
**@ மாற்றுத்திறனாளிகளுக்கு விலக்களிக்கப்பட்டது.**

## 6.2. பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளுக்கான கட்டண விபரம்

பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கலந்தாய்வின் மூலம் இணைப்புக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு பெற்ற மாணவர்கள் தமிழக அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணத்தின்படி ஆண்டுக்கு ரூ.40,000/-* (அனைத்து கட்டணங்களையும் உள்ளடக்கிய கட்டணமாக) அந்தந்த கல்லூரிகளில் செலுத்தவேண்டும். இதில் மாணவர், அவரது குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பின் ஆண்டுக்கு ரூ.20,000/- கல்விக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டு மீதமுள்ள தொகையை செலுத்தவேண்டும். மேலும் இணைப்புக்

கல்லூரிகளில் நிர்வாக இடஒதுக்கீட்டில் சேர்க்கை பெறும் மாணவர்கள் கல்விக் கட்டணமாக ஆண்டுக்கு ரூ.70,000/-* செலுத்தவேண்டும்.

*** மாறுதலுக்கு உட்பட்டது.**

## 6.3. கல்விக் கட்டணம் திரும்ப பெறுதல்

கலந்தாய்வின் மூலம் இடஒதுக்கீடு பெற்ற மாணவர்கள் கல்லூரி முதல் பருவத்தினை பதிவு **(Semester Registration)** செய்வதற்கு முன்பாக கல்லூரியிலிருந்து விலகினால் அவர் செலுத்தியக் கட்டணத்தை முழுமையாக திரும்ப பெற்றுக் கொள்ளலாம். ஆனால், முதல் பருவத்தினை பதிவு **(Semester Registration)** செய்த பின்பு கல்லூரியிலிருந்து விலக நேர்ந்தால் அவர் செலுத்திய வைப்புத் தொகையை மட்டுமே திரும்ப பெற முடியும். (இவை அனைத்து உறுப்புக் கல்லூரிகளுக்கும் பொருந்தும்).

## 7. கல்வி உதவித் தொகை

பல்கலைக் கழகத்தில் ஆதி திராவிடர் மாணவர் உதவித் தொகை, மத்திய அரசின் கல்வி உதவித்தொகை, கட்டணச் சலுகைகள், மாநில அரசின் முதல் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டண சலுகைகள், பெரியார் அறக்கட்டளை உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை, இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம், புது தில்லியால் வழங்கப்படும் ஊக்கத்தொகை மற்றும் பிற நிறுவனங்களில் பெறும் உதவி தொகை போன்றவையும் உள்ளன. மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் பாடப்பிரிவு மற்றும் கல்லூரியின் அடிப்படையில் இவை மாறுபடும்.

## 8. வசதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்

1. மாணவர்கள் குறிப்பிட்ட பாடப்பிரிவில் ஒரு கல்லூரியில் சேர்ந்த பின்னர் பல்கலைக் கழகத்தின் மற்ற கல்லூரிகளுக்கு இடமாற்றம் செய்ய இயலாது.
2. ஆண்கள், பெண்களுக்கான தனித்தனி விடுதிகள் மற்றும் ஒவ்வொரு கல்லூரி வளாகத்திலும் அருகலை **(wifi)** இணைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
3. மாணவர்களின் விடுதிகளில் உணவுக்கான கட்டணம் பங்கீட்டு முறையில் **(Sharing System)** வசூலிக்கப்படும்.
4. மாணவர்கள் அனைவரும் அந்தந்த கல்லூரிகளில் உள்ள விடுதிகளிலேயே தங்கி பயிலுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மாணவர்கள் விடுதிகளில் தங்கி படிக்க இயலாத சூழ்நிலைகளில், கல்லூரியின் முதன்மையர் அனுமதி பெற்று வெளியிலுருந்து கல்வி பயிலலாம்.
5. ஒவ்வொரு கல்லூரி வளாகத்திலும் அத்தியாவசியப்பொருட்கள் மற்றும் சிற்றுண்டி வசதியுடன் கூடிய ஒரு மாணவர் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
6. மாணவர் திறன் மேம்பாட்டிற்கான உள் கட்டமைப்பு வசதிகள் உள்ளன.
7. அனைத்துக் கல்லூரி வளாகத்திலும் நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம், உள்அரங்க விளையாட்டு வசதிகள், நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம் ஆகியவை உள்ளன.
8. கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் இருசக்கர மோட்டார் வாகனம், கார் போன்ற வாகனங்கள் பயன்படுத்த அனுமதி இல்லை
9. மாணவர்களுக்கு கல்லூரி நேரங்களில் அலைபேசி பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது.
10. மாணவர்கள் அந்தந்த பாடப்பிரிவுகளுக்கு வரையறுக்கப்பட்ட சீருடை அணிவது கட்டாயமாகும்.

## 9. அனுமதிக்கப்பட்ட கல்லூரியில் சேருதல்

பல்கலைக்கழக கல்லூரிகளில் இடங்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள், சேர்க்கை கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின் படி, ஒதுக்கப்பட்ட கல்லூரிகளுக்கு

குறிப்பிட்ட தேதியில் சென்று தங்களது சேர்க்கையை உறுதி செய்யவேண்டும். இல்லையெனில் அந்த மாணவரின் சேர்க்கை ரத்து செய்யப்படும். இது தொடர்பாக எவ்வித சிறப்பு அனுமதியும் அல்லது விலக்கும் அளிக்கப்படமாட்டாது.

## 10. குறை தீர்ப்பு

கலந்தாய்வின் மூலம் இடஒதுக்கீடு பெற்ற மாணவர்களுக்கு தகவல் கையேட்டில் குறிப்பிடாத எந்த ஒரு விதியின் விளக்கத்திற்கும் பல்கலைக் கழகத்தின் முடிவே இறுதியானது. பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் கல்வித் தொடர்பான எந்தவொரு முறைகேடுகள், குறைகள் போன்றவற்றிக்கு முதன்மையர் (வேளாண்மை) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641003 அவர்களை அணுகி தங்கள் குறைகளை தெரிவிக்கலாம் கல்லூரி சேர்க்கை தொடர்பான புகார்கள் / மேல்முறையீடுகள் போன்றவற்றிற்கு கோயம்புத்தூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட நீதிமன்றங்கள் மட்டுமே தீர்ப்பளிக்கும் அதிகார வரம்பை பெற்றுள்ளன.

தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன் அனுமதியின்றி 65% அல்லது 50% என்ற அரசாங்க ஒதுக்கீட்டின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு,மாணவர்சேர்க்கை நடத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளுக்கு அதிகாரம் இல்லை. இணைப்பு கல்லூரிகள் அரசாங்க ஒதுக்கீட்டு இடங்களில் உள்ள நிரப்பப்படாத இடங்களை, தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு சேர்க்கப்படும் எந்தவொரு மாணவர் சேர்க்கைக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சட்டப்பூர்வமாக பொறுப்பேற்காது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளில், நிர்வாக இடஒதுக்கீட்டு இடங்களில் சேர்க்கப்படும் மாணவ / மாணவியர்கள் இடைநிற்றல் அல்லது வேறு காரணங்களுக்காக கல்வியை தொடர முடியாத சூழ்நிலையில் மாணவர்களின் சான்றிதழ்கள் மற்றும் எந்தவொரு கட்டணத்தையும் இணைப்புக் கல்லூரிகள் திருப்பித் தராத பட்சத்தில் அதனால் ஏற்படும் எந்தவொரு சட்ட சிக்கல்களுக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது.